*76*

# "மற்றும் அவர் புறப்பட்டார்" (2)

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #32*

VII. *இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம் (தொடர்ச்சி).*

E. *செவ்வாய்க்கிழமை: "கேள்விகளின் பெரியநாள்" (தொடர்ச்சி).*

*7. எருசலேமின் அழிவு மற்றும் இரண்டாம் வருகை பற்றி அப்போஸ்தலர்களுக்கு உரை (தொடர்ச்சி).*

b. *எருசலேமின் அழிவு பற்றிய போதனை (தொடர்ச்சி).*

*(2) எருசலேமின் அழிவுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகள் (மத். 24:15-35; மாற். 13:14-31; லூக். 21:20-36).*

c. *இரண்டாம் வருகை பற்றிய போதனை*

*(1) பொதுவான போதனை.*

(a) *இரண்டாவது வருகை அறிவிக்கப்படாததாக இருத்தல் (மத். 24:36-41; மாற். 13:32).*

(b) *தயாராக நிலைத்திருத்தலின் அவசியம் (மத். 24:42-51; மாற். 13:33-37).*

### அறிமுகம்

*நமது முந்திய பாடத்தில், நாம் மத்தேயு 24 மற்றும் அது தொடர்பாக மாற்கு, லூக்கா சுவிசேஷங்களில் உள்ள வசனப்பகுதிகள் பற்றிய படிப்பு ஒன்றைத் தொடங்கினோம். நாம், யுத்தங்கள், இயற்கைப் பேரழிவுகள், உபத்திரவங்கள் மற்றும் இவை போன்றவற்றைக் குறிப்பிடுகிற மத்தேயு 24:4-14 வசனப்பகுதியைக் கண்ணோக்கினோம். இவைகள், கர்த்தருடைய மறுவருகைக்கு நேரத்தை அமைக்கத் தீர்மானித்து இருக்கின்ற மக்களுக்கு மிகவும் விருப்பத்திற்குரிய வேத வசனப் பகுதிகளாக உள்ளன. அவர்கள், பேரழிவை அறிவிக்கும் தலைப்புச் செய்திகளைச் சுட்டிக்காண்பித்து, "இரண்டாம் வருகை சமீபமாயிற்று!" என்று அறிவிக்கின்றனர். இந்த முன்னறிவிப்பாளர்கள் (பின்வரும்) இரண்டு உண்மைகளைக் காணாது விட்டுவிடுகின்றனர்:*

*(1) இவை போன்ற நிகழ்ச்சிகள் முடிவின் அடையாளங்களாக இருப்பதில்லை, ஆனால் (இவற்றை நான் முந்திய பாடத்தில் அழைத்*

*திருந்ததுபோல) "அடையாளமற்றவைகளாக" இருக்கின்றன. இவைகள் எல்லாக் காலங்களிலும் நடைபெறுகின்றன. இவைகள் முதலாம், இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளிலும் அதைத் தொடர்ந்து இன்றைய நாட்கள் வரையிலும் நடைபெற்றுக் கொண்டுள்ளன. இவைகள் வர விருக்கும் வானவியல் சார்ந்த பேரழிவினைச் சுட்டிக்காண்பிப்பவைகளாக இருப்பதில்லை.*

*(2) இவ்வதிகாரத்தின் முற்பகுதியில் ஆய்வின் கீழ் உள்ள பாடப் பொருள் இரண்டாம் வருகை என்பதல்ல, ஆனால் எருசலேமின் அழிவு என்பதாகவே உள்ளது.[1] மத்தேயு 24:4-15ஐ இரண்டாம் வருகைக்குப் பயன்படுத்துகின்றவர் சந்தர்ப்பப் பொருளைப் புறக்கணிப்பவராக இருக்க வேண்டும்.*

*இந்தப் பாடத்தில் நாம், எருசலேமின் அழிவு பற்றிக் கர்த்தரின் சீஷர்கள் புரிந்துணரும்படி அவர் விரும்பிய "அடையாளத்தைப்" பற்றிப் படிப்போம். அந்த அழிவைப் பற்றிய கிறிஸ்துவின் வெளிப்படுத்தும் விவரிப்பையும் நாம் கலந்துரையாடுவோம். கடைசியில், நாம் அவரது இரண்டாம் வருகை பற்றி அவரது பின்பற்றாளர்கள் கேட்ட கேள்விகளுக்கான அவரது பதிலின் தொடக்கப் பகுதியையும் ஆய்வு செய்வோம்.*

## *எருசலேமின் அழிவு*
## *(மத். 24:15-35; மாற். 13:14-31; லூக். 21:20-36)*

***உண்மையான அடையாளம் (மத். 24:15, 16; மாற். 13:14அ; லூக். 21:20)***

*இயேசு எருசலேமின் அழிவுடன் நேரடியாகத் தொடர்பற்ற நிகழ்ச்சி களின் பட்டியலைக் கொடுத்த பின்பு, அவரது பின்பற்றாளர்கள் எதிர் நோக்கியிருக்க வேண்டிய அடையாளத்தை அவர் குறிப்பிட்டார். அவர், "மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்" (மத். 24:15, 16). மாற்கு சுவிசேஷ விவரத்தில், "அது [பாழாக்குகிற அருவருப்பு] நிற்கத்தகாத இடத்திலே நிற்கக் காணும்போது" என்று இருக்கிறது (மாற். 13:14அ).*

*புலனறிக் கோட்பாட்டாளர்கள், "பாழாக்கும் அருவருப்பு, நிற்கத் தகாத இடத்திலே நிற்கக் காணும்போது" என்பதற்கு யூகங்கள் செய்வதை மகிழ்வுடன் அனுபவிக்கின்றனர், ஆனால் சுவிசேஷ விவரங்கள் நமக்கு, ஏவுதல் பெற்ற விளக்கம் ஒன்றைக் கொடுக்கின்றன. லூக்காவில் உள்ள இதன் இணை வசனப்பகுதியில் இயேசு, "எருசலேம் சேனைகளால் சூழப் பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்" என்று கூறினார் (லூக். 21:20). அப்போது எருசலேமில் வாழ்ந் திருந்தவர்கள், கி.பி. 60களின் பிற்பகுதியில் அவர்களின் நகரம் ரோமப் படைகளால் சூழப்பட்டதைக் கண்டனர்.*

கிறிஸ்து தமது உரையைக் கேட்டவர்களிடத்தில், ''பாழாக்கும் அருவருப்பு'' என்பது "தானியேல் தீர்க்கதரிசியால் பேசப்பட்டது" என்று நினைவூட்டினார். "பாழாக்கும்" மற்றும் "அருவருப்பு" என்ற வார்த்தைகள் பல்வேறு இணைவுகளில், பலமுறைகள் தானியேல் தீர்க்கதரிசியின் புத்தகத்தில் காணப்படுகின்றன (9:26, 27; 11:31; 12:11). தானியேல் 11:31 மற்றும் 12:11 ஆகிய வசனங்கள் அநேகமாக, மக்கபேயரின் புரட்சிக்கு (கி.மு. 167)[2] வழிநடத்தியதான, எருசலேமுக்குள் புறதெய்வச் சடங்குகளை அறிமுகப்படுத்துதல் என்பதை முயற்சி செய்த செலூக்கிய அரசரான அந்தியோகஸ் எபிபெனஸ் என்பவனைக் குறிப்பிட்டிருக்கலாம், அதே வேளையில், 9:26, 27 வசனங்கள், ரோமர்களால் எருசலேம் அழிக்கப்படுதலுக்கு அதிகம் நேரடியான குறிப்பைக் கொண்டுள்ளன ... தானியேல் 9ல் உள்ள வசனங்கள், மக்கள் மேசியாவைப் புறக்கணித்தபடியால், நகரமும் தேவாலயமும் அழிக்கப்படும் என்று தீர்க்கதரிசனம் உரைத்தன. இங்கு தகுந்த சில வசனப்பகுதிகள் உள்ளன: "... பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார் [அதாவது, புறக்கணிக்கப்பட்டு கொலை செய்யப்படுவார்] ... பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள் ..." (தானி. 9:26). டேவிட் ரெக்டின் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> கி.பி. 70ல் எருசலேமை வீழ்த்திச் சாய்த்த தீத்து ("பிரபு"; 9:26ஆ) என்ற தளபதிக்குக் கீழ்ப்பட்ட ரோமப் படையே "பாழாக்கும் அருவருப்பு" என்பதாக இருந்தது ...
>
> இந்த நிகழ்ச்சி "பாழாக்கும் அருவருப்பு" என்று தானியேலினால் குறிப்பிடப்பட்டது, ஏனென்றால் தாவீதின் நகரமானது - விக்கிர காரதனையின் பின்னல் வேலையால் அருவருப்பானதாக[3] இருந்த - ரோமப் படையினால் பாழாக்கப்பட்டது ... எபிரெய இனத்தின் அழிவு தானியேலின் குறிப்பிடத்தக்க தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் என்று யூதர்கள் கூடப் புரிந்துணர்ந்தனர். யூத வரலாற்றாளர்களில் ஒருவரான யோஸிப்பஸ் என்பவர், "ரோம அரசாங்கத்தைப் பற்றியும், அவர்களால் நமது நாடு பாழாக்கப்படுவது பற்றியும் தானியேல்கூட எழுதினார்" என்று எடுத்துரைத்தார்.[4]

**உண்மையான அடையாளம் வருகிறபோது என்ன செய்ய வேண்டும் (மத். 24:16-20; மாற். 13:14ஆ-18; லூக். 21:21, 23)**

''எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை'' இயேசுவின் பின்பற்றாளர்கள் கண்டபொழுது, அவர்கள் தப்பியோட வேண்டியிருந்தது (மத். 24:16; மாற். 13:14ஆ; லூக். 21:21அ-வைக் காணவும்). கிறிஸ்து, "வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக் கடவன். வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்குத் திரும்பாதிருக்கக் கடவன்" என்று கூறினார் (மத். 24:17, 18; மாற். 13:15, 16; லூக். 21:21ஆ-வைக் காணவும்). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "நீங்கள் நகரத்தில் இருந்தால், ஒரு பையை நிரப்பு வதற்கோ அல்லது உங்களுக்கு மிகவும் பிரியமான பொருட்களைப் பத்திரப்

*படுத்துவதற்கோ நிற்காதீர்கள். நீங்கள் நகருக்குப் புறம்பே இருந்தால், வீட்டிற்குத் திரும்பிப் போகாதீர்கள். உடனடியாக எருசலேமை விட்டு வெளியேறி விடுங்கள்" என்று இது அர்த்தப்படுகிறது.*

*இயேசு கூடுதலாக, "அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ!" (மத். 24:19; மாற். 13:17; லூக். 21:23அ-வைக் காணவும்). கர்ப்பமாயிருக்கும் பெண்களுக்கும் சிறு குழந்தைகளைக் கொண்டுள்ள தாய்மார்களுக்கும், பயணம் செய்வது கடினமாயிருக்கும்.[5] மேலும் அவர், ''நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வு நாளிலாவது சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்'' என்றும் கூறினார் (மத். 24:20; மாற். 13:18ஐக் காணவும்). ஓய்வுநாளன்று நகரத்தின் வாயிற்கதவுகள் மூடப்பட்டுவிடும்,[6] மாரி [மழைக்] காலத்தில் பயணம் செல்லுதல் மிகவும் கடினமாக இருக்கும். (இந்த விஷயங்கள் பற்றிய, கிறிஸ்தவர்களின் ஜெபம் பதில் அளிக்கப்பட்டன என்பது தெளிவு, ஏனென்றால் ரோமர்கள் வசந்த காலத்தில் வந்தனர்.)*

*முந்திய பாடத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒரு கருத்தை நான் இங்கு மீண்டும் கூற அனுமதியுங்கள்: ஒருவர் இருக்கும் இடம், ஒரு பெண் கர்ப்பமாக இருக்கின்றாளா அல்லது பால்கொடுத்துக் கொண்டு இருக்கின்றாளா, பருவகாலம் அல்லது வாரத்தின் நாள் [எது] என்பது போன்ற விஷயங்கள் இரண்டாம் வருகைக்கு என்ன செய்யக்கூடியவையாக உள்ளன? ஒன்றுமே இல்லை. இருப்பினும், இவை யாவையும், எருசலேமிலிருந்து தப்பியோடுதலைப் பொறுத்தமட்டில் குறிப்பிடத்தக்கவைகளாக இருக்கும்.*

*மத்தேயு மற்றும் மாற்கு ஆகிய இருவரும் எழுதிய சுவிசேஷ விவரங்கள் ஏவுதல் பெற்ற தலையங்க விளக்கவுரையொன்றைக் கூடுதலாக எடுத்துரைக்கின்றன: "வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்" (மத். 24:15; மாற். 13:14). தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் இயேசுவின் செய்தியைப் புரிந்து கொண்டார்கள் என்பதையும், எருசலேம் அழிக்கப்படுவதற்கு முன்பு அவர்களால் அங்கிருந்து தப்பியோட முடிந்தது என்பதையும் தொடர்ந்து நடைபெற்ற வரலாறு வெளிப்படுத்துகிறது. ரோமர்களின் படை நெருங்கிக் கொண்டிருந்தது என்று கேள்விப்பட்டபோது அல்லது அது கண்காணும் காட்சிப் பகுதிக்குள் வந்ததைக் கண்டபோது, அவர்களில் சிலர் புறப்பட்டுச் சென்றிருக்கலாம். முற்றுகையானது எடுபட்ட பின்பு மற்றவர்களுக்கு அந்த வாய்ப்புத் தரப்பட்டது.*

> *கி.பி. 300ம் ஆண்டுவாக்கில் வாழ்ந்த ஈசுபியஸ் என்ற பெயருடைய, சபை எழுத்தாளர் ஒருவரால் ஆர்வமிக்க ஒரு வரலாறு கூறப்பட்டது. எருசலேமின்மீது இடப்பட்டிருந்த முற்றுகை தற்காலிகமாக எடுக்கப்பட்ட ஒரு காலவேளை இருந்தது.[7] பேரரசர் விட்டேலியஸ் இறந்துபோயிருந்தார், வெஸ்பாசியன் என்பவர்தான் எருசலேமின் அழிவுக்கென்று பொறுப்பேற்றிருந்த தளபதியாயிருந்தார். ரோம அரசவையானது, விட்டேலியஸுக்குப் பின்பு வெஸ்பாசியன்தான் ஆளுநராகப் பொறுப்பேற்க வேண்டும் என்று செய்தி அனுப்பிற்று. வெஸ்பாசியன் இதற்காகப் புறப்பட்டுச் சென்றபோது, அவரது மகனான தீத்து என்பவர் தாக்குதலுக்குப் பொறுப்புள்ள தளபதியாக*

நியமிக்கப்பட்டார். இந்தக் கட்டளை மாற்றத்தின்போது, முற்றுகையில் ஒரு இடைவேளை இருந்தது. இயேசுவின் வார்த்தைகளில் நம்பிக்கையாயிருந்த கிறிஸ்தவர்கள் எருசலேமில் இருந்து தப்பியோடி யோர்தான் நதியைக் குறுக்கே கடந்து பெல்லா என்ற நகருக்குச் செல்வதற்கு, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர். இவ்வாறு அவர்கள் பயங்கரமான அழிவிலிருந்து தப்பினர். ஈசுபியஸின் கூற்றுப்படி, இந்த முற்றுகையின்போது ஒரு கிறிஸ்தவர் கூடக் காயப்படவில்லை, அவர்களில் ஒருவரும் அழிந்து போகவுமில்லை.[8]

**வரவிருந்த நிகழ்ச்சியின் இயல்பு**
***(மத். 24:21-28; மாற். 13:19-23; லூக். 21:22-24)***

மத்தேயு 24ன் அடுத்த பகுதி எருசலேமின் அழிவை விவரிக்கிறது. அது பயங்கரமானதாக இருக்கும் என்று இயேசு முன்னதாகவே கண்டார்:

> ஏனெனில், உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம்[9] அப்பொழுது உண்டாயிருக்கும். அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ[10] அந்த நாட்கள் குறைக்கப்படும் (மத். 24:21, 22; மாற். 13:19, 20ஐக் காணவும்).

மீண்டுமாக அவர் பின்வருமாறு கூறினார்:

> எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்படி நீதியைச் சரிக்கட்டும்[11] நாட்கள் அவைகளே. அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும், பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ, பூமியின்மேல் மிகுந்த இடுக்கணும் இந்த ஜனத்தின்மேல் கோபாக்கினையும் உண்டாகும். பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள்; புறஜாதியாரின் காலம்[12] நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும் (லூக். 21:22-24).

இந்த வார்த்தைகள் அதிக பட்சமானதாக ஒலிக்கலாம், ஆனால் உண்மை நிலையானது இந்த முன்னுரைத்தலுக்குப் பொருந்தியிருந்தது என்பதை வரலாறு வெளிப்படுத்துகிறது.

மூன்றாண்டுகள் கால அளவாக எருசலேம் நகரம் முற்றுகையில் இருந்தது, அவ்வப்போது இம்முற்றுகை எடுபட்டது. பஸ்கா பண்டிகைக்கு வரும் திருப்பயணிகள், மற்றும் முன்னேறிவரும் ரோமப்படையினருக்கு முன்பாகத் தப்பியோடும் மற்ற மக்கள் ஆகியோரால் நகரில் மக்கள் தொகை பெருகியிருந்த வேளையில் முற்றுகை தொடங்கிற்று. அந்த முற்றுகையின் போது, நகருக்குள் அகப்பட்டுக் கொண்டவர்கள் உயிர்பிழைப்பதற்கு மட்டுமீறிய வழிமுறைகளை அடைக்கலமாய் மேற்கொண்டனர்.[13] கடைசியில் கி.பி. 70ல், தீத்து, எருசலேமைக் கைப்பற்றுவதில் வெற்றியடைந்தான். ரோமர்கள் நகரத்தின்மீது வந்தபோது, அவர்கள் பத்தாயிரக்கணக்கில் யூதர்களைக் கொன்றனர்.[14] யோசிப்பஸ் என்பவரின்

கூற்றுப்படி, பலர் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர், "சிலுவைகளில் இடம் தேவை ஏற்படும் வரையிலும், சிலுவைகளில் தொங்க உடல்களுக்குப் தேவை ஏற்படும் வரையிலும்'' மக்கள் சிலுவைகளில் அறையப்பட்டனர்.[15] "ஒரு யூதர் கூட நகரத்தில் அல்லது கண்ணுக் கெட்டிய வரையில் உயிருடன் விட்டுவிடப்படாதபடி'' இன்னும் ஆயிரக்கணக்கானவர்கள் கைதிகளாகப் பிடித்து இழுத்துச் செல்லப் பட்டனர்.[16]

ரோமர்கள், தேவாலயம் உட்பட நகரத்தை சிதைத்து, அதை எரித்துப் போட்டனர் (மத். 22:7ஐக் காணவும்). அக்கினியானது தேவாலயத்தில் இருந்த பொன்னை உருகச் செய்தது,[17] படைவீரர்கள் அந்த உலோகத்தை மீட்பதற்கான தங்கள் முயற்சிகளில், உண்மையிலேயே "எந்தக் கல்லையும் புரட்டிப்போடப்படாததாக விட்டு வைக்காது இருந்தனர்." இயேசு, "ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும்" என்று கூறியிருந்தார் (மத். 24:2). "குறிப்பிடத்தக்க வகையில், அந்தத் தேவாலயத்தில் இருந்து ஒரே ஒரு கல்லும், இன்னொரு கல்லின் ஒரு பகுதியும் மாத்திரமே புதைபொருள் ஆராய்ச்சியாளர்களால் நேர்மறை யான வகையில் கண்டுபிடிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது."[18] எருசலேமின் அழிவு, அந்த இடத்திற்குச் சென்றவர்கள், அதில் மக்கள் எப்போதாவது குடியிருந்தார்கள் என்பதை நம்புவதற்கு மிகவும் கடினமான சூழ்நிலை இருந்த அளவுக்கு மிகவும் மோசமானதாக இருந்தது.[19]

துன்பத்தின் மத்தியில், போலிக் கிறிஸ்துகள் எழும்புவார்கள், இவர்கள் பொய்யான நம்பிக்கைகளைக் கொடுப்பார்கள் என்பதை இயேசு முன்கண்ணோக்கினார் (மத். 24:23-25[20]; மாற். 13:21-23). மக்கள் வதந்திகளைப் பரப்பத் தொடங்குவார்கள்: "அவர் இங்கு இருக்கின்றார்" அல்லது "அவர் அங்கு இருக்கின்றார்." கிறிஸ்து, "அவர்களை நம்பாதிருங் கள்'' என்று கூறினார் (மத். 24:26). கடைசியில் இயேசு மீண்டும் திரும்பி வரும்போது, எவரொருவரும் அதை அறிவிக்க வேண்டியிராது - ஏனென் றால் ஒவ்வொருவரும் அதை அறிவார்கள்! ''மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்" (மத். 24:27; வெளி. 1:7).[21]

போலிக் கிறிஸ்துக்களால் தரப்படும் எந்த ஒரு நம்பிக்கையும் பொய்யான நம்பிக்கையாகவே இருக்கும், ஏனென்றால் எருசலேமின் முடிவு முத்திரையிடப்பட்டிருந்தது. யூத இனத்தவருக்குத் தேவனிடம் திரும்புவதற்கான ஒவ்வொரு வாய்ப்பும் தரப்படும், ஏனெனில் சுவிசேஷம் முதன்முதலாக யூதர்களுக்கே பிரசங்கிக்கப்படும் (ரோமர் 1:16), ஆனால் தேவனுடைய இரக்கத்தின் உடன்படிக்கைகள் புறக்கணிக்கப்படும். எருசலேமின் அழிவானது, தேவனுடன் அந்த இனத்தாரின் உறவுமுறை முடிந்தது என்பதை நிரூபிக்கும். முன்கண்ணோக்கிய மாபெரும் வைத்தியர், நோயாளி இறந்தார் என்று அறிவித்து, ''பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள்[22] வந்து கூடும்" என்றார் (மத். 24:28).

**உடனடியாகத் தொடரவிருந்த தாக்குதல் தரும் நிகழ்ச்சிகள்**
**(மத். 24:29-31; மாற். 13:24-27; லூக். 21:25-28)**

இது நம்மை ஒரு கடினமான அத்தியாயத்தின் மிகக் கடினமான பகுதிகளுக்குக் கொண்டு வருகிறது:

> *அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப் படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது. மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர் களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட வர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள் (மத். 24:29-31; மாற். 13:24-27; லூக். 21:25-28ஐக் காணவும்).*

இந்த வசனங்களில் உள்ள சொற்றொடராக்கமானது இரண்டாம் வருகைக்கு உரியது போன்று ஒலிக்கிறது. பலர் நம்புவதுபோல், இயேசு தமது உரையில் தலைப்பிலிருந்து தலைப்பிற்குத் தாண்டிச் சென்றாரென்றால், ஒருவேளை அவர் அந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டிருக்கலாம். இருப்பினும், மத்தேயு 24:34ல் உள்ள "இவைகளெல்லாம்" என்ற சொற் றொடரானது 29 முதல் 31 வரையுள்ள வசனங்களையும் உள்ளடக்குகிறது (இது ஒரு இயல்பான யூகமாக உள்ளது), [எனவே] கிறிஸ்து, இன்னொரு நிகழ்வைத் தமது சிந்தையில் கொண்டிருந்திருக்க வேண்டும்.

நாம் மற்ற சாத்தியக்கூறுகளை ஆராய்கையில், இயேசுவின் உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில், யூதர்களானவர்கள் வெளிப்படுத்தும் மொழிநடைக்கு நன்கு பழக்கப்பட்டிருந்தனர் என்பதை நமது சிந்தையில் வைத்துக்கொள்ள வேண்டும்.[23] மத்தேயு 24:29-31[மற்றும் இதற்குத் தொடர்புடைய பிறவசனப்பகுதிகளி]ல் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர் கள் யாவும் வேதாகமத்தின் பிற இடங்களில், வானவியல் ரீதியான பேரழிவு நிகழ்ச்சியின் பல வகையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் ஆகிய அடையாளமானது, (இன்றைய நாட்களில் நாம் நினைவுகூரத்தக்க நிகழ்ச்சிகளைக் குறிப்பதற்கு, "உலகத்தையே குலுக்கியது" என்ற சொல் விளக்கத்தைப் பயன்படுத்துவது போலவே) அரசர்கள் மற்றும் அரசாங்கங் கள் ஆகியவற்றின் வீழ்ச்சியைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது:

- இவ்வகைப்பட்ட சொற்றொடராக்கம், பாபிலோனின் வீழ்ச்சியைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது (ஏசா. 13:1, 9-11).
- இது ஏதோமின் வீழ்ச்சியை முன்னுரைக்கப் பயன்படுத்தப்பட்டது (ஏசா. 34:4, 5).
- இது பார்வோன் ராஜா (அதாவது, எகிப்து நாடு) தள்ளப்படுதல் குறித்துப் பயன்படுத்தப்பட்டது (எசே. 32:2, 7, 8).[24]

*மீண்டுமாக, ''கர்த்தருடைய வருகை'' (அல்லது இதுபோன்ற சொற்றொடர்கள்) என்பது, மனிதர்கள் மத்தியில் கர்த்தர் தமது நோக்கத்தை நிறைவேற்றுதலின் பொதுவான வழிமுறையைக் குறிப்பிடக்கூடும்:*[25]

- *தேவன் எகிப்தை அழிக்க "வந்தார்" (ஏசா. 19:1).*
- *இயேசு தமது ராஜ்யத்தை/சபையை நிலைநாட்ட தாம் "வருவதாக" வாக்குத்தத்தம் செய்தார் (இது அவரது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பின் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று நடைபெற்றது, அப். 2) (மத்தேயு 16:28ஐ மாற்கு 9:1உடன் ஒப்பிடவும்).*

*நாம் மத்தேயு 24:29-31ஐ விளக்கப்படுத்துகையில், குறைந்தது மூன்று உண்மைகளையாவது நமது சிந்தையில் காத்துக்கொள்ளுதல் அவசியமாக உள்ளது: (1) வசனங்கள் 29 முதல் 31 வரையுள்ள நிகழ்ச்சிகள் எருசலேமின் அழிவு என்ற "உபத்திரவம் முடிந்தவுடனேயே" நடைபெறும் என்று இயேசு கூறியிருந்தார் (வ. 29). (2) இந்த நிகழ்ச்சியானது அப்பொழுது வாழ்ந்து கொண்டிருந்தவர்களின் வாழ்நாள் காலத்திலேயே நடைபெற்றன என்று வசனம் 34 சுட்டிக்காண்பிக்கிறது. (3) வசனம் 29 முதல் 31 வரையுள்ள பகுதியின் சொற்றொடரமைப்பானது இரண்டாம் வருகை தவிர மற்ற நிகழ்ச்சிகளைக் குறிப்பிட முடியும். இவை எல்லாவற்றையும் சிந்தையில் வைத்த நிலையில், இப்போது நாம், மத்தேயு 24:29-31ன் நியாயமான, அறிவிற்கு ஏற்புடைய தரவழைத்தல் ஒன்றைக் கண்ணோக்க முடியும்:*

*வசனம் 29: எருசலேமும் தேவாலயமும் அழிக்கப்பட்டபோது, இது யூத நாட்டின் வீழ்ச்சியைச் சைகைப்படுத்திற்று.*

*வசனம் 30அ: ''மனுஷகுமாரனுடைய அடையாளம்'' என்பது தேவாலயத்தின் அழிவாக இருந்தது.*[26] *எருசலேமின் அழிவு என்பது கர்த்தரால் உரைக்கப்பட்ட மிகவும் தாக்குதல் செலுத்தும் முன்னுரைத்தல் களில் ஒன்றாக இருந்தது - மற்றும் இதன் நிறைவேற்றத்தை அவரது உரையைக் கேட்டவர்கள் காண்பார்கள்.*[27] *தேவாலயம் முற்றிலுமாக அழிக்கப்பட்ட நிகழ்ச்சியானது, இயேசுவின் தீர்க்கதரிசனம் நிறைவேற்றம் அடைந்துள்ளதையும் அவர்மீது நம்பிக்கை வைக்கப்பட முடியும் என்பதை யும் காண்பித்தன. இது, அவர் மேசியாவாக இருக்கின்றார் என்பதற்கும் ஆகையால் அவர் விசுவாசிக்கப்பட்டு கீழ்ப்படியப்பட வேண்டும் என்பதற்கும் "அடையாளமாக" உள்ளது.*

*வசனம் 30இ: எருசலேம் அழிக்கப்பட்டபோது, பூமியின் மக்களினங் கள் யாவும் புலம்பும்.*

*வசனம்30ஆ: அந்த வேளையில், மனுஷகுமாரன் ''வருவதற்கு'' - அதாவது, உலகத்தின் இரட்சிப்புக்கான அவரது திட்டத்தைத் தொடர் வதற்கு - ஒவ்வொரு விஷயமும் ஆயத்தமாக இருக்கும். இவ்விதமாக இயேசு, "இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால் ..." (லூக். 21:28) என்று கூறினார்.*

*வசனம் 31:* இதுவரைக்கும் நமது விளக்கம் சரியானதாக இருக்கிறதென்றால், வசனம் 31ல் கூறப்பட்டுள்ள விஷயம் பூமியெங்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லுதல் என்ற பிரதான கட்டளையின் அடையாளத்துவ முன்னுரைத்தலாக உள்ளது. ''தூதர்கள்'' என்பதின் கிரேக்க வார்த்தை ''செய்தியாளர்கள்'' என்று அர்த்தப்பட முடியும், இவர்கள் மனிதர்களாகவோ அல்லது [தேவ] தூதர்களாகவோ இருக்கலாம். தேவனுடைய செய்தியாளர்கள் (சுவிசேஷகர்கள்) உலக முழுவதிலும் சென்று, ''அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை'' (சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்பவர்களை) ஒன்றுகூட்டிச் சேர்ப்பார்கள்.

இந்த அணுகுமுறையைப் பற்றி நீங்கள் முதன்முறையாகச் சிந்திக்கையில், இது ஏற்புடையதாக அல்லது ஏற்புடையதல்லாததாக இருக்கலாம், ஆனால் இதைப் புறக்கணிப்பதற்கு முன்பு இரண்டு கருத்துக்களை ஆழ்ந்து சிந்தியுங்கள்: (1) இந்த விளக்கமானது பொறுக்கித் தேர்ந்துகொள்ளுதல் என்பதின் பிடிகுழிகள் சிலவற்றைத் தவிர்க்கிறது,[28] மற்றும் (2) இந்த விளக்கமானது, வேத வசனங்களில் வேறெவ்விடத்திலும் உள்ள வெளிப்படுத்துதலின் அடையாளத்துவத்துடன் ஒத்துப்போகிறது மற்றும் ஆய்வின் கீழுள்ள பாடக்கருத்துக்களைப் பற்றிப் புதிய ஏற்பாடு முழுவதிலும் உள்ள தெளிவான போதனை ஆகிய இரண்டிற்குமே சீர்பொருந்தியதாக உள்ளது.

### ***"இந்தச் சந்ததி" (மத். 24:32-35; மாற். 13:28-31; லூக். 21:29-36)***

எருசலேமின் அழிவைக் குறித்து இயேசு தமது போதனையை முடிக்கையில், ''அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார்'' (லூக். 21:29அ), "அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்" (மத். 24:32, 33; மாற். 13:28, 29; லூக். 21:29-31). மத்தேயு 24:33 மற்றும் மாற்கு 13:30ல் உள்ள "இவைகளையெல்லாம்" என்ற வார்த்தைகள் இந்த உரையில் இதற்கு முன் இயேசு கூறியிருந்த யாவற்றையும், "பாழாக்கும் அருவருப்பு" (மத். 24:15; மாற். 13:14) - அதாவது "எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருத்தல்" (லூக். 21:20) என்பது - பற்றிய விசேஷ வலியுறுத்தத்துடன் குறிக்கிறது. அத்திமரத்தின் இலைகளைப் பார்த்து, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அவர்கள் அறிந்துகொள்ள முடிந்தது போன்றே, ரோமப்படைகள் நெருங்குவதைக் காணும்போது எருசலேமின் அழிவு சமீபமாயிற்று[29] என்று அவர்கள் அறிய முடியும்.

அது நம்மை பின்வரும் திறவுகோல் வசனத்திற்குக் கொண்டு வருகிறது: ''இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். 24:34; மாற். 13:30; லூக். 21:32ஐக் காணவும்). "இவைகளெல்லாம்'' என்பது முந்திய வசனத்தில் அர்த்தப்படுத்தியது (மத். 24:33) போன்றே அர்த்தப்படுவதாக உள்ளது: இயேசு கலந்துரையாடிக் கொண்டிருந்த யாவையும், எருசலேம் நகரைச் சுற்றிலும் ரோமப்படைகள் சூழ்ந்துகொண்டு அதை அழித்தல் என்ற நிகழ்ச்சியின்மீது விசேஷித்த வலியுறுத்தத்துடன் அர்த்தப்படுகிறது.

''சந்ததி'' என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட காலவேளையில் வாழும் மனிதர்களைக்

குறித்தது என்று நாம் முந்திய பாடத்தில் வலியுறுத்தினோம்.[30] மத்தேயு, "சந்ததி" என்ற வார்த்தையுடன், "இந்த" என்ற வார்த்தையைப் பயன் படுத்தியபோது, பேச்சாளர் யாருக்கு உரையாற்றிக் கொண்டிருந்தாரோ அவர்களுடன் சமகாலத்தில் வாழ்ந்த மக்களையே அவர் [மத்தேயு] குறிப் பிட்டார் (11:16; 12:41, 42ஐக் காணவும்).[31] இயேசு இவ்வார்த்தைகளைப் பேசி நாற்பது ஆண்டுகளுக்கும் குறைவான காலத்திற்குப் பின்பு, கி.பி. 70ல் எருசலேம் அழிக்கப்பட்டது; இது கிறிஸ்து யாரிடத்தில் பேசிக்கொண்டிருந் தாரோ, அவர்களின் வாழ்நாள் காலத்திற்குள்ளாகவே *நடைபெற்றது.*

எருசலேமின் அழிவுகுறித்து இயேசுவின் முன்னுரைத்தல் நிச்சயமான தாக இருந்ததா? அவர், "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தை களோ ஒழிந்துபோவதில்லை" என்று கூறினார் (மத். 24:35; மாற். 13:31; லூக். 21:33ஐக் காணவும்). நாம் கண்டுள்ளபடி, கிறிஸ்துவின் வார்த்தைகள் அவர் முன்னுரைத்தபடியே மிகச்சரியாக நிறைவேற்றப்பட்டன.

## இரண்டாம் வருகை (மத். 24:36-51; மாற். 13:32-37)

மத்தேயு 24:36ல் தொடங்கி, இயேசு *மாறுபட்ட* ஒரு பாடக்கருத்தை அணுகினார். விஷயம் இதுவாக உள்ளது என்பதற்கு பல குறிப்புகள் உள்ளன:[32] (1) அவர் [ஆங்கில வேதாகமத்தின்படி] "ஆனால்"[33] என்ற வினையாலணையும் இடைச் சொல்லுடன் புதிய பாடக்கருத்தை அறிமுகப் படுத்தினார்: "[*ஆனால்*] அந்த நாளையும் அந்த நாழிகையையும் ..." (மத். 24:36; மாற். 13:32ஐக் காணவும்). (2) பன்மையில் "அந்த நாட்கள்" (மத். 24:22, 29; மாற். 13:20, 24ஐக் காணவும்) என்பதற்கும் "அந்த நாள்" (மத். 24:36; மாற். 13:32ஐக் காணவும்) என்பதற்கும் இடையில் ஒரு நேர்மாறு உள்ளது.[34] (3) மத்தேயு 24:36க்கு முன்னும் பின்னும் உள்ள கலந்துரை யாடலில் பல நேர்மாறுகள் காணப்படுகின்றன.[35] எடுத்துக்காட்டாக, இவ்வத்தியாயத்தின் முற்பகுதியில் அவர், எருசலேம் அழிக்கப்பட இருந்ததை அவர்கள் அறியக்கூடும்படிக்கு ஒரு "அடையாளத்தை" அவர்களுக்குக் கொடுத்திருந்தார். (எருசலேம் நகரத்தை ரோமப்படைகள் சுற்றிச் சூழ்ந்து கொள்வார்கள் என்பது அந்த "அடையாளமாக" இருந்தது [லூக். 21:20].) இருப்பினும், அடுத்ததாக அவர், எவ்வித எச்சரிக்கையும் இல்லாது நடைபெறவுள்ள ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய கலந்துரையாடலைத் தொடங்கினார். அது இரண்டாவது வருகை என்ற நிகழ்ச்சியைப் பற்றியதாக இருந்தது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், மத்தேயு 24:36ல் கர்த்தர் கடைசியாக, மத்தேயு 24:3ல் இருந்த கேள்விகளின் இரண்டாவது தொகுதிக்குப் பதில் அளிக்கத் தயாரானார்: "உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?"

### "அந்த நாளையும் அந்த நாழிகையையும்" (மத். 24:36-41; மாற். 13:32)

அவரது வருகை மற்றும் காலத்தின் முடிவின் "அடையாளத்தைப்" பற்றிச் சீஷர்கள் கேட்டிருந்தனர், ஆனால் இயேசு, தமது இரண்டாவது

*வருகைக்கு அடையாளம் எதுவும் இராது என்று கூறினார்: "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" (மத். 24:36; மாற். 13:32ஐக் காணவும்).*[36]

> *... கிறிஸ்து ... தாம் எப்போது [மீண்டும்] வருவார் என்பதைத் தாமே அறியாதிருந்ததாக வலிவார்ந்த வகையில் எடுத்துரைக்கின்றார். அவரே அதை அறியாதிருந்தால், அவர் எந்த ஒரு அடையாளத்தையும் எவ்வாறு தரமுடியும்? பொழிப்புரை நடையில் கிறிஸ்து, தமது சீஷர்களிடத்தில், "ஆம், எருசலேம் மற்றும் தேவாலயம் ஆகியவற்றின் அழிவைச் சுட்டிக்காண்பிக்கும் அடையாளங்கள் சில உள்ளன ... எனது இரண்டாவது வருகையைப் பொறுத்தமட்டில், நான் மேகங்கள் மீது வல்லமையுடனும் மாபெரும் மகிமையுடனும் வருவேன் என்பது தான் எனக்குத் தெரியும் ... அதைப் பற்றிக் குறிப்பான அடையாளங்கள் எதையும் தர இயலாது, ஏனென்றால் அப்படிப்பட்ட ஏதொன்றும் எனக்கே தெரியாது" என்றே கூறுகின்றார்.*[37]

*இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன்னான எச்சரிக்கை எதுவும் இராது என்பதால், அவரது மறுவருகையானது பலரை ஆயத்தமற்ற நிலையில் பிடிப்பதாக இருக்கும், இது நோவாவின் காலத்தில் பெரும்பாலானவர்களை ஆயத்தமற்ற நிலையில் வெள்ளப்பெருக்கு பிடித்தது போன்றதாகவே இருக்கும்:*[38] *"... ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண்கொண்டும் பெண்கொடுத்தும் [இருந்தனர்]" (மத். 24:38; வ. 37-39ஐக் காணவும்).*

*புசித்தல், குடித்தல் மற்றும் திருமணம் செய்தல் பற்றிக் கர்த்தர் பேசியபோது, வாழ்வின் சாதாரண நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளுதல் தவறு என்று அவர் கூறினாரா? இல்லை, நாம் அவரது மறுவருகைக்காக நமது இருதயத்திலும் வாழ்விலும் தயாராக இருக்கும் வரைக்கும், இந்த விஷயங்களைச் செய்தல் என்பது சரியானதாகவும் ஏற்புடையதாகவும் உள்ளது. மறுவருகையின்போது வயலில் வேலை செய்துகொண்டிருக்கும் இரு மனிதர்களைப் பற்றிய ஒரு விவரிப்பை இயேசு கொடுத்தார். அவர், "... ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான்" என்று கூறினார் (மத். 24:40). "ஏற்றுக்கொள்ளப்படுதல்" என்றால் "பரலோகத்தில் தேவனுடன் இருக்கும்படி எடுத்துக் கொள்ளப்படுதல்" என்று அர்த்தப்படுகிறது (அப். 1:2, 11உடன் ஒப்பிடவும்), அதே வேளையில் "கைவிடப்படுதல்" என்பது தேவனிடத்திலிருந்து நித்தியத்திற்கும் பிரிந்து நரகத்தில் இருத்தலைக் குறிக்கிறது (2 தெச. 1:7-9).*[39] *இந்த விவரிப்பில் வருகிற இரு மனிதர்களுமே, நாளின் மிகச் சாதாரணமான ஆண்கள் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்; ஆனால் ஒருவர் கர்த்தரின் மறுவருகைக்கு ஆயத்தமான நிலையில் இருந்தார், இன்னொருவர் அவ்வாறு இருக்கவில்லை. பின்பு கிறிஸ்து, அந்த நாட்களில் பெண்கள் ஈடுபட்டிருந்த செயல்பாடுகள் ஒன்றில் இருந்த இரு பெண்கள் பற்றிய இதே போன்ற*

விவரிப்பு ஒன்றைப் பயன்படுத்தினார் (மத். 24:41).

**"விழித்திருங்கள்" (மத். 24:42-51; மாற். 13:33-37)**

மத்தேயு 24:42-51ல், கடைசியாக நாம், இந்தக் கலந்துரையாடலைத் தேவன் நமக்கென்று பாதுகாத்து வைத்திருப்பதற்கான அடிப்படைக் காரணத்திற்கு வருகின்றோம். உங்களுக்கும் எனக்கும் இந்த செய்தி அவசியமாயிருக்கிறது. இயேசு மறுபடியும் எப்போது வருவார் என்று நமக்குத் தெரியாதபடியால், நாம் எப்போதுமே ஆயத்தமாக இருக்க வேண்டும்: "உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையில் வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்" (மத். 24:42; மாற். 13:33ஐக் காணவும்). அவரது வருகையானது இரவில் திருடன் வருகிற விதமாய் இருக்கும், ஒரு திருடன் நாம் எதிர்பாராத வேளையில் வருகிறதுபோல் இருக்கும் (மத். 24:43, 44; 1 தெச. 5:2; 2 பேது. 3:10ஐக் காணவும்).[40] அவரது வருகையானது, எதிர்பாராத வேளையில் திரும்பி வரும் எஜமான் ஒருவர் தமது ஊழியக்காரர்களில் ஒருவர் உண்மையற்றவராயிருத்தலைக் கண்டுபிடிப்பதுபோல் இருக்கும் (மத். 24:45-51; மாற். 13:34ஐக் காணவும்).[41] தேவனுடைய ஊழியக்காரர் ஒவ்வொருவருக்கும் இயேசுவின் செய்தி பின்வருமாறு:

> அப்படியே நீங்களும் விழித்திருங்கள்; ஏனெனில் வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ சேவல்கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள். நீங்கள் நினையாத வேளையில் அவன் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், "விழித்திருங்கள்" (மாற். 13:35-37).

அடுத்த அத்தியாயமான மத்தேயு 25ல், ஆயத்தமாக நிலைத்திருத்தலின் அவசியத்தின்மீது தொடர்ந்து கவனம் செலுத்தினார்: பத்து கன்னிகைகள் பற்றிய உவமையில், மணமகன் வரும்போது ஐந்து பேர் தயாராக இருந்தனர், ஆனால் மற்ற ஐந்து பேர் தயாராக இருக்கவில்லை (வ. 1-13). தாலந்துகளின் உவமையில், நாம் ஒவ்வொருவரும் நமது உக்கிராணத்துவம் பற்றி ஒரு நாளிலே கணக்கு ஒப்புவிப்போம் என்று கிறிஸ்து போதித்தார் (வ. 14-30). மத்தேயு 25ம் அத்தியாயமானது, கர்த்தரின் மறுவருகையின் போது நடைபெறவிருக்கும் நியாயத்தீர்ப்பு பற்றிய ஒரு சித்தரிப்புடன் முடிவடைகிறது (வ. 31-46). நமது அடுத்த பாடமான "ஆயத்தமாகுதல்" என்பது அந்த அதிகாரம் பற்றிய ஒரு ஆய்வுடன் "கிறிஸ்துவின் வாழ்வு, 6" என்ற புத்தகத்தில் தொடங்கும்.

## முடிவுரை

இந்தப் பாடம் மத்தேயு 24ஐ மையப்படுத்தியதாக இருந்துள்ளது. மனக் கலக்கம் தரும் இந்த அத்தியாயம் பற்றிக் கேட்கப்படக் கூடிய ஒவ்வொரு

*கேள்விக்கும் நான் பதில் அளித்தேனா? இல்லை, ஆனால், உங்கள் படிப்பை நீங்கள் தொடரும்போது, மிக முற்போக்கான மற்றும் புலன் வழிக் கொள்கையான கோட்பாடுகளை நீங்கள் தவிர்ப்பதற்கு உதவியாகச் சில சிந்தனைகளை நான் முன் வைத்துள்ளேன் என்று நம்புகின்றேன். ஒரு வாழ்நாள் காலம் முழுவதும் நீங்கள் இதை ஆழ்ந்து சிந்தித்த பின்பும்கூட, நீங்கள் அப்போதும் கேள்விகளைக் கொண்டிருக்கலாம். நான் இன்னமும் அவ்வாறே இருக்கின்றேன்.*

*இது, நாம் இந்த அதிகாரத்திலிருந்து ஏதொன்றையும் கற்றுக்கொள்ள இயலாது என்று அர்த்தப்படுத்துகிறதா? மீண்டுமாக, "இல்லை" என்பதே எதிரொலிக்கும் ஒரு பதிலாக உள்ளது.*[42] *இந்த அதிகாரத்தில், எருசலேமின் அழிவின்மீது மையங்கொண்டுள்ள பகுதியில் இருந்து நாம் பின்வரும் ஒரு சில சத்தியங்களைக் கற்றுக்கொள்ள முடியும்: (1) தேவனுடைய நியாயத்தீர்ப்பில் இருந்து எவரொருவரும் தப்ப இயலாது. (2) தேவன் எதையாவது சொல்லுகின்றார் என்றால், அதை அவர் அர்த்தப்படுத்துகின்றார். (3) இயேசு தாம் உரிமைகோரிய எல்லாமுமாக உள்ளார், ஏனெனில் அழிவைக் குறித்த அவரது தீர்க்கதரிசனங்கள் யாவும் விவரமாக நிறைவேறின. ஆகையால், அவர் தமது ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் மூலமாகக் கூறியுள்ள யாவற்றையும் நாம் கவனிப்போமாக.*

*இந்த அதிகாரத்தில் இரண்டாம் வருகையை வலியுறுத்துகிற பகுதியிலிருந்து நாம் பின்வரும் ஒரு சில சத்தியங்களைக் கற்றுக்கொள்ள முடியும்: (1) கிறிஸ்து திரும்பவும் வருகின்றார்! (2) அவர் எந்த வேளையிலும் வரக்கூடும். அந்த வேளையை எவரொருவரும் அறிவதில்லை. (3) "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்!" (மத். 25:34) என்று அவர் நம்மிடம் கூறுவதைக் கேட்கும்படி நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டியது அவசியமாக உள்ளது.*

---

*குறிப்புகள்*

[1]*நீங்கள் இந்தக் கருத்தை, "மற்றும் அவர் புறப்பட்டார் (1)" என்ற முந்திய பாடத்திலிருந்து மறுகண்ணோட்டமிட விரும்பலாம்.*[2]*தொடக்க ஆதார மூலங்களுக்கு, 1 மக்கபேயர் 1:54, 2 மக்கபேயர் 6:4, 5; மற்றும் யோசிப்பசின் Antiquities 12.5.4 ஆகியவற்றில் காணவும்.* [3]*பழைய ஏற்பாட்டில், "அருவருப்பு" என்ற சொற்றொடர் வழக்கமாக விக்கிரகாராதனைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. ரோமப் படைவீரர்கள் தங்கள் படைக் கொடிகளில் இருந்த சின்னங்களை ஆராதித்தனர். "அருவருப்பு" என்பது பற்றி யூதர்களுக்கும் ரோமர்களுக்கும் இடையில் நிலவிய போராட்டங்களைப் பற்றி யோஸிப்பஸ் என்பவர் எழுதினார்* (*Antiquities* 18.3.1; 18.5. 3; *Wars* 6.6.1). [4]David Rechtin, "Daniel's Prophecy of the Seventy Weeks" in "Daniel, 2," *Truth for Today* (June 2001): The quotation from Josephus is from *Antiquities* 10.11.7. [5]*உங்களுக்குப் பிள்ளைகள் இருந்தால், பிள்ளைகளை - தக்க வேளையில் - எங்காவது கொண்டு சேர்ப்பது என்ன ஒரு அறைகூவலாயிருக்கிறது*

*என்பது பற்றிய சொந்தமான விவரிப்பு ஒன்றை இவ்விடத்தில் கூடுதலாகக் கூறுவதற்கு நீங்கள் விரும்பலாம்.* [6]*மேலும், யூதக் கிறிஸ்தவர்கள் பலரின் மனச்சாட்சியானது அவர்களை ஓய்வுநாளில் பயணம் செய்ய அனுமதிக்காது.* [7]See Josephus *Wars* 5.10.1. [8]Neale Pryor, "The 'Abomination of Desolation' in Daniel 9:27 & Matthew 24:15-21" in "Daniel, 2" *Truth for Today* (June 2001): 50. See Eusebius *Ecclesiastical History* 3.5. [9]*(இவ்விடத்திலும் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 7:14லும் உள்ள) "மகா உபத்திரவம்" என்ற சொற்றொடர், பூமிக்குக் கிறிஸ்து ஆளுகை செய்யத் திரும்ப வருவார் என்ற கற்பனையான கருத்திற்கு முன்னதாக உலக முழுவதிலும் ஏழு ஆண்டுகள் பரவலான உபத்திரவம் இருக்கும் என்ற கற்பனையான கருத்தைக் குறிப்பிடுவதற்கு ஆயிரமாண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளது. மத்தேயு 24ல் "மகா உபத்திரவம்" என்பது கி.பி. 70ல் எருசலேம் அழிக்கப்பட்ட நிகழ்ச்சியாக இருந்தது.* [10]*"தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" என்பது கிறிஸ்தவர்களைக் குறிப்பிடுகிறது - இவர்கள் தேவனுடைய அருளிரக்கத்தால் தப்பிச் சென்றார்கள்.*

[11]*இந்தப் பழிவாங்குதல் என்பது மேசியாவைப் புறக்கணித்ததால் ஏற்பட்ட தெய்வீகத்துவத் தண்டனையாக இருந்தது.* [12]*ஆயிரமாண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்கள் "புறஜாதியாரின் காலம்" என்ற மறைமுகமான சொற்றொடரை தங்கள் தெய்வீகத்துவக் கால அட்டவணையின் அத்தியாவசியமான பகுதியாகப் பயன்படுத்துகின்றனர், ஆனால் கி.பி. 70ல் நடைபெறவிருந்த எருசலேமின் அழிவு என்பதே இந்தக் கலந்துரையாடலின் பாடக்கருத்து என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். சாத்தியமான பல விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன; ஆனால் எருசலேம் நகரமானது, அழித்து முடிக்கப்படுதல் என்ற தேவனுடைய திட்டம் நிறைவேற்றப்படும் வரையிலும் (முற்றுகையின்போது) ரோமர்களால் "காலின் கீழ் மிதிக்கப்படும்" என்பதே மிகவும் எளிய விளக்கமாக உள்ளது.* [13]*2 இராஜாக்கள் 6:24-30ஐ மிக முன்னதாக ஒரு குறுகிய முற்றுகையின்போது மக்கள் செய்த பயங்கரமான விஷயங்களுக்கு ஒரு உதாரணம் என்ற வகையில் காணவும்.* [14]*முற்றுகையின்போது பதினோரு இலட்சம் பேர் அழிந்து போயினர் என்றும் தொன்னூற்று ஏழாயிரம்பேர் கைதிகளாகப் பிடித்துக் கொண்டு போகப்பட்டனர் என்றும் யோசிப்பஸ் என்பவர் கூறினார்* (*Wars* 6.9.3). *இருப்பினும், யோஸிப்பஸ் மிகைப்படுத்திக் கூறினார் என்று மிகத் தற்காலத்தியக் கல்வியாளர்கள் நம்புகின்றனர்.* [15]Josephus *Wars* 5.11.1. [16]J. Norval Geldenhuys, "Luke," *The Biblical Expositor,* ed. Carl F. H. Henry (Philadelphia: Holman, 1960), 3:141. [17]*தேவாலயத்தில் இருந்த பொன்னில் சிலவற்றைப் பற்றி "மற்றும் அவர் புறப்பட்டார் (1)" என்ற பாடத்தில் காணவும்.* [18]David Rechtin, "Daniel's Prophecy of the Seventy Weeks" in "Daniel, 2" *Truth for Today* (June 2001): 23-24. Brother Rechtin gave a reference for this detail: Harry Thomas Frank, *An Archaeological Companion to the Bible* (London: SCM Press, 1972), 249. [19]*கிறிஸ்துவின் நாட்களில் இருந்த எருசலேமில் ஒரு சில மதில்கள் மட்டுமே எஞ்சியுள்ளன, இவற்றில் புகழ்பெற்ற "அழுகைச் சுவர்" என்பதும் உள்ளடங்குகிறது. யூதர்களின் தேவாலயம் இருந்த இடத்தில் இப்போது* "The Dome of the Rock" *என்று அறியப்படும் மசூதி ஒன்று உள்ளது.* [20]*கள்ளக் கிறிஸ்துகள் எழும்பி "கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் (அதாவது, கிறிஸ்தவர்களையும்) வஞ்சிக்கத் தக்கதாக மாபெரும் அடையாளங்களையும் அற்புதங்களையும் நிகழ்த்துவார்கள்" என்று இயேசு மத்தேயு 24:24ல் கூறியது கவனிக்கத்தக்கதாக உள்ளது. "அற்புதங்களைச் செய்வதாக" தோற்றம் அளிக்கும் திறன் என்பது, ஒருவர் தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர் என்பதற்குத் தன்னிலேயே ஒரு அடையாளமாக ஒருக்காலும் இருந்ததில்லை. ஒரு போதகரின் வாழ்வும் போதனையும் தேவனுடைய*

*வெளிப்படுத்துதலுடனும் கருத்து ஒருமைப்பட்டு இருக்க வேண்டும்.*

*[21]மத்தேயு 24:27 வசனமானது எருசலேமின்மீது நியாயத்தீர்ப்புக்குக் கிறிஸ்துவின் வருகையின் காலத்தைப் பற்றிப் பேசக்கூடும்; ஆனால் சந்தர்ப்பப் பொருளில், இது அவர் நபர்த்துவத்தில் வருவதை - அதாவது, இரண்டாவது வருகையை-க் குறிப்பதாகக் காணப்படுகிறது. இயேசு, "இங்கே" அல்லது "அங்கே" என்ற தெளிவற்ற கூற்றுக்களை, இரண்டாவது வருகை நடைபெறும்போது அது எல்லாருக்கும் தெளிவாக இருக்கும் என்ற உண்மையுடன் நேரெதிராக ஒப்பிட்டார் என்பதாகக் காணப்படுகிறது. [22]இது நேர்ப்பொருளில் உண்மையிலேயே நடந்தது. ரோம முற்றுகையின் போது, எருசலேமில் கழுகுகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகியதாக யாரோ ஒருவர் எழுதினார். இருப்பினும், "vultures" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை "eagles" என்றும் மொழிபெயர்க்கப்படக்கூடும் என்று சிலர் சுட்டிக் காண்பித்துள்ளனர். கர்த்தர், ரோமப்படைக்கொடியின் உச்சியில் இருந்த கழுகுச் சின்னத்தைக் குறிப்பிட்டார் என்று அவர்கள் நினைக்கின்றனர். [23]நீங்கள், வெளிப்படுத்துதலின் மொழிநடை என்றால் என்ன என்று விளக்கம் அளிப்பதற்கு, "மற்றும் அவர் புறப்பட்டார் (1)" என்ற பாடத்தை மீண்டும் காணவும். [24]இப்படிப்பட்ட சொல்லாக்கமானது யோவேல் 2:28-32லும் பயன்படுத்தப் பட்டது, அது புதிய உடன்படிக்கையின் தொடக்கம் தொடர்பாக அப். 2:16-21ல் மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது. ("அப். நடபடிகள் 1" என்ற புத்தகத்தில் 99-101 பக்கங்களில், அப். 2:19-21ன் மீதான குறிப்புகளைக் காணவும்.) [25]தற்காலிக நியாயத்தீர்ப்புக்காகக் கர்த்தரின் "வருகை" எதிர். இரண்டாவது வருகை என்பதன் பாடக்கருத்து வெளிப்படுத்தின விசேஷத்திற்கான விளக்கவுரையில் அடிக்கடி கலந்துரையாடப்படும். [26]அது தேவனிடத்திலிருந்து வந்து எல்லாரும் காணக்கூடிய அடையாளமாக இருந்ததால் "வானத்தில்" ஒரு அடையாளம் என்று பேசப்பட்டது. [27]ஒப்பீட்டு சுவிசேஷ விவரங்கள் கி.பி. 70க்கு முன்பு எழுதப்பட்டன. [28]அதாவது, சில அணுகுமுறைகள், ஒரு குறிப்பிட்ட வசனமானது எருசலேமின் அழிவைக் குறித்துப் பேசுகிறதா அல்லது இரண்டாம் வருகையைப் பற்றிப் பேசுகிறதா என்று விளக்கவுரையாளரை அவரது சுயவிருப்பப்படி முடிவு செய்ய அனுமதிக்கின்றன. [29]மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோரின் சுவிசேஷ விவரங்கள், "அவர் சமீபமாய் ... இருக்கிறார்" என்று உணர்ந்து அறிகின்றன (மத். 24:33; மாற். 13:29) - அதாவது, எருசலேமின்மீதான நியாயத்தீர்ப்புக்குக் கர்த்தரின் "வருகை" உள்ளது என்று உணர்ந்தறிகின்றன. லூக்கா சுவிசேஷ விவரத்தில் "தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள்" என்றுள்ளது (லூக். 21:31). புதிய ஏற்பாட்டில், "ராஜ்யம்" என்ற வார்த்தையின் மிகப் பொதுவான இரண்டு பயன்பாடுகள் சபையையும், பரலோகத்தையும் குறிப்படுவதாக உள்ளன. எருசலேமின் அழிவின்போது, சபையானது ஏறக்குறைய நாற்பதாண்டுகளாக இருந்திருந்தது, எனவே இவ்விடத்தில் இது சபையைக் குறிப்பதில்லை. இதற்கு மறுபுறத்தில், ஒருவர் "பரலோகம்" (அதாவது, இந்த உலகத்தின் முடிவு) என்று இந்த வார்த்தையை விளக்குவாரென்றால், அடுத்த வசனத்தில் ஒரு பிரச்சனையுள்ளது, அது "இவையெல்லாம் சம்பவிக்குமுன் இந்தச் சந்ததி ஒழிந்துபோகாது" என்று கூறுகிறது (லூக். 21:32). "சந்ததி" என்பது வழக்கமாக அர்த்தப்படுத்துவதிலிருந்து மாறுபட்ட ஒன்றை அர்த்தப்படுத்துகிறது என்று கருத்துக் கூறுவதின் மூலம் இந்த இடர்ப்பாட்டைத் "தீர்ப்பதற்குப்" பலர் முயற்சி செய்கின்றனர். ("சந்ததி" என்ற வார்த்தை பற்றி இந்தப் பாடத்திலும் இதற்கு முந்திய பாடத்திலும் உள்ள கலந்துரையாடல்களை மறுகண்ணோட்டமிடவும்.) "ராஜ்யம்" என்ற வார்த்தையை, "மனிதர்களின் இருதயங்களில் தேவனுடைய ஆளுகை" என்ற அதன் அடிப்படை அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளுதல் என்பது இதற்கு மிகச் சிறந்த தீர்வாக*

*இருக்கலாம். பின்பு இந்த வசனத்தை சுவிசேஷம் பரவுதல் மற்றும் மக்கள் தேவனுடைய ராஜ்யத்தின் (கொலோ. 1:13) குடிமக்களாகுதல் என்பதை எடுத்துரைக்கப் பயன்படுத்தலாம்.* [30]*"சந்ததி" என்ற சொல்விளக்கமானது மத்தேயு சுவிசேஷத்தில் பதிமூன்று முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது (1:17; 11:16; 12:39, 41, 42, 45; 16:4; 17:17; 23:36; 24:34); ஒவ்வொரு முறையும் இது ஒரு நபரின் வாழ்வுக்காலம் என்ற அர்த்தத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது.*

[31]F. Furman Kearley, "An Exegesis of Matthew 24," *Abilene Christian University Lectures* (1980): 130. [32]*மத்தேயு 24:36 வசனமானது, ஆண்களும் பெண்களும் பரலோகத்திற்கோ அல்லது நரகத்திற்கோ அனுப்பப்படுவார்கள் என்று முடிவு செய்யும் சிந்தனை வரியொன்றை அறிமுகப்படுத்துகிறது என்பது ஒரு தெளிவான குறிப்பாக உள்ளது (மத். 25:46). இது, எருசலேம் அழிக்கப்பட்டபோது நடைபெறவில்லை.* [33]*"ஆனால்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை "de" என்பதாக உள்ளது.* [34]*"அந்த நாள்" என்பது மத்தேயுவினால் வேறொரு இடத்தில் (மத். 7:22) நியாயத்தீர்ப்பின் நாளைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது.* [35]*முந்திய பாடத்தில் உள்ள "மத்தேயு 24-ன் நேர்மாறுகள்" என்ற வரைவட்டவணை 1 க் காணவும்.* [36]*மத்தேயு 24:36ம் வசனத்தை இயேசு பூமிக்கு வந்து மனித உருவெடுத்தபோது விட்டுக் கொடுத்திருந்த அவரது தெய்வீக உரிமைத்துவத்தின் வகைக்கான ஒரு உதாரணமாகப் பயன்படுத்த முடியும் (பிலி. 2:6, 7).* [37]Kearley, 131-32. [38]*வெள்ளப்பெருக்கு வரப்போகிறது என்று நோவா மக்களிடத்தில் கூறினார், ஆனால் அவர்கள் அவரை நம்பவில்லை. இவ்விதமாக அவர்கள் வழக்கம்போல் வாழ்ந்துகொண்டிருந்தனர். இன்றைய நாட்களில் கர்த்தர் மீண்டும் வருவார் என்று வேதாகமம் போதித்தாலும், வசனத்தின் எச்சரிக்கைகளைப் பலர் புறக்கணிக்கின்றார்கள். ஆகையால் அவர்கள் ஆயத்தமாக இராதவர்களாய்ப் பிடிபடுவார்கள்.* [39]*ஆயிரமாண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்கள் "பரவச நிலை" என்று அவர்கள் அழைக்கும் போதனையில் மத்தேயு 24:40, 41ஐ இணைக்கின்றனர்: அவர்கள், கிறிஸ்து மறுபடியும் வரும்போது, ஆயத்தமாக இருப்பவர்கள் மேகங்களில் அவரோடே கூட ''எடுத்துக் கொள்ளப்படுகையில்'' ஆயத்தமாக இராதவர்கள் ஏழு ஆண்டுகள் உபத்திரவப்படுவதற்காக இந்தப் பூமியில் ''விடப் படுவார்கள்'' என்று போதிக்கின்றனர். இப்படிப்பட்ட ஒரு "பரவச நிலை"யைத் தொடர்ந்து "உபத்திரவம்" வரும் என்பது பற்றி வேதாகமத்தில் ஒன்றும் கூறப்பட்டிருப்பதில்லை.* [40]*கர்த்தருடைய மறுவருகைக்குக் காலத்தை அமைக்க விரும்புகின்றவர்கள் மத்தேயு 24:44ஐ இருதயத்தில் பதிய வைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. அவர்கள் "காலத்தின் அடையாளங்களை" பார்த்து அவரது வருகை சமீபமாயிருக்கிறது என்று முன்னுரைக்க முடியும் என்று நினைக்கின்றனர், ஆனால் அவர் ''நீங்கள் நினையாத நாழிகையில் மனுஷ குமாரன் வருவார்" என்று கூறினார். ஸ்டாஃபோர்டு நார்த் அவர்கள், இரண்டாம் வருகையைப் பற்றிப் பேசுகின்றபோது, அது "இரவில் திருடன் வருகிற விதமாயிருக்கும்" என்பதை வலியுறுத்துகின்றார். அவர் தமது உரையைக் கேட்பவர்கள் இவ்வார்த்தைகளைப் பலமுறை திரும்பிக் கூறும்படி செய்கின்றார்.*

[41]*இது பொதுவாக, ''உண்மையுள்ள ஊழியக்காரன் மற்றும் பொல்லாத ஊழியக்காரன் ஆகியோரின் உவமை" என்று அழைக்கப்படுகிறது.* [42]*இராபர்ட்ஸன் அவர்கள், "... போதனையின் பொதுவான போக்கை நாம் பிடித்துக்கொண்டு, காலம் மற்றும் இடம் ஆகியவற்றிற்கு எதிராக இயேசுவே எச்சரிக்கை செய்துள்ளதால், அவற்றைப் பற்றிய நுணுக்கமான விவரங்களைத் தனியே விட்டுவிட முடியும்" என்று எழுதினார்* (A. T. Robertson, *A Harmony of the Gospels for Students of the Life of Christ* [New York: Harper & Row, 1950], 173).